## இயல் 1 - சிறுபஞ்சமூலம்

பாடம் : தமிழ்

வகுப்பு : 5

### அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1 வனப்பு - இச்சொல் லின் பொருள் ______

அ) அறிவு ஆ) பொறுமை **இ) அழகு** ஈ) சினம்

2 நன்றென்றல் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______

அ) நன் + றென்றல் **ஆ) நன்று + என்றல்**

இ) நன்றே + என்றல் ஈ) நன்றெ + என்றல்

3.என்று + உரைத்தல் - இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ______

அ) என்றுஉரைத்தல் ஆ) என்றுயுரை த்தல்

இ) என்ற உரை த்தல் **ஈ) என்றுரைத்தல்**

4 கண்ணுக்கு அழகு ______

அ) வெறுப்பு ஆ) பொறுமை **இ) இரக்கம்** ஈ) பொறாமை

### ஆ. பொருத்துக

1. கண்ணுக்கு அழகு - இரக்கம் காட்டல்
2. காலுக்கு அழகு - பிறரிடம் சென்று கேட்காமை
3. ஆராய்ச்சிக்கு அழகு - இவ்வளவுதான் என உறுதி செய்து கூறுதல்
4. இசைக்கு அழகு - கேட்பவர் நன்று என்று சொல்லுதல்
5. அரசனுக்கு அழகு - நாட்டு மக்களை வருத்தாமை

### இ. பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக

கண் வனப்பு - எண் வனப்பு

கேட்டார் - வாட்டான்

### ஈ. வினாக்களுக்கு விடையளிக்க .

**1. கண்ணுக்கு எது அழகு?**

கண்ணுக்கு அழகு இரக்கம் கொள்ளும் பண்பாகும்.

**2. காலுக்கு எது அழகைத் தருகிறது?**

பிறரிடம் பொருளை வேண்டிச் செல்லாமல் இருப்பது காலுக்கு அழகைத் தருகிறது.

**3. இசைக்கு அழகாக எது கூறப்படுகிறது?**

இசையைக் கேட்போர் அதனை நன்று என்று கூறுதல், இசைக்கு அழகாகும்.

**4. அரசனுக்கு அழகைத் தருவது எது?**

தன் நாட்டு மக்களை வருத்த மாட்டான் என்று பிறர் அவனைப் புகழ்ந்து கூறுதல் அரசனுக்கு அழகைத் தரும்

### உ. சிந்தனை வினா

**1. நம்மைப் பிறர் பாராட்ட வேண்டுமெனில், நம்மிடம் எத்தகைய பண்புகள் இருக்க வேண்டும்?**

- மனித நேயம்.
- பிறருடைய நலத்தைப் பற்றி அறிதல்.
- பகைவனிடமும் அன்பு காட்டுதல்.
- பிறர் செய்யும் தவற்றை மன்னித்து விட்டு அவருக்கே உதவியும் செய்தல்.
- தம்மைவிட எளியவரிடமும் பணிவுடன் இருத்தல்.
- பிற உயிரினங்களிடத்தும் அன்பு காட்டுதல்.

## வாரித் தந்த வள்ளல்

### அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக

1. பொற்காசு - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........
   அ) பொற் + காசு  ஆ) பொல் + காசு  **இ) பொன் + காசு**  ஈ) பொ + காசு
2. கொடைத்திறம் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....................
   **அ) கொடை+திறம்**  ஆ)கோடை+திறம்  இ)கொட+திறம்  ஈ)கொடு + திறம்

3.களிறு என்பது .................. யைக் குறிக்கும்
   அ) குதிரை  ஆ) கழுதை  **இ) யானை**  ஈ) ஒட்டகம்

4.தரணி - இச்சொல்லின் பொருள் ....................
   அ) மலை  **ஆ) உலகம்**  இ) காடு  ஈ) வானம்

5.சோறு' இச்சொல்லுடன் பொருந்தாதது ................
   அ) உணவு  ஆ) அமுது  இ) அன்னம்  **ஈ) கல்**

### ஆ. பொருத்துக

1. பேழை - பெட்டி
2. மாரி - மழை
3. வாயில் - வாசல்
4. ஆணை - கட்டளை
5. இரவல் - கடன்

### இ. வினாக்களுக்கு விடையளிக்க

**1. பாணனின் குழந்தைகள் பசியால் வாடக் காரணம் என்ன?**

பாணனின் வீட்டில் தானியங்களும் மாவும் தீர்ந்துவிட்டதால், குழந்தைகள் பசியால் வாடின.

**2. வல்வில் ஓரியின் சிறந்த பண்பு யாது?**

தன்னை நாடி வருபவர்களின் துயரைக் கண்டு வருத்தமுற்று உடனடியாக அவர்களின் துயர் துடைப்பவர்.

**3. பரிசு பெற்ற பாணன், மன்னனை எவ்வாறு வாழ்த்தினான்?**

"கற்ற கல்வி அறியாமை அகற்றுதல் போல, உற்ற துயர் துடைக்கும் வள்ளலே! உங்களின் குன்றாப் புகழ் கொடைப் பண்பு ஓங்குக! வாழ்க! வாழ்க! நீவிர் வாழ்க!" என்று பாணன் மன்னனை வாழ்த்தினான்.

**4. “வாரித் தந்த வள்ளல்” - இப்படக் கதை மூலம் நீவிர் அறிந்து கொண்டதை எழுதுக.**

“வாரித் தந்த வள்ளல்’ இப்படக் கதை மூலம் சங்க கால வள்ளல்கள், தமிழுக்குப் புகழ் சேர்க்கும் விதமாக தமிழ் பாடும் புலவர்களையும் பாணர்களையும் பரிசுப் பொருள்கள் கொடுத்து அவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ உதவி செய்துள்ளனர் என்பதை அறிந்து கொண்டேன்

**ஈ. சிந்தனை வினா.**

**1. வல்வில் ஓரியைப் போல் ஈகைக் குணம் உனகிருந்தால் நீ யாருக்கெல்லாம் உதவி செய்வாய்?**

வல்வில் ஓரியைப் போல் ஈகைக் குணம் எனக்கிருந்தால், ஆதரவற்ற முதியவர்கள், பெற்றோரை இழந்த சிறுவர்கள், உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கெல்லாம் உதவி செய்வேன்.

அவர்கள் சுயமாக வாழ்வதற்குத் தேவையானவற்றைச் செய்வேன்.

**உ. உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

குப்பன் ஐந்தாம் வகுப்பு படிக்கிறான். தான் செய்யும் வேலையில் யாரும் குறுக்கிடக்கூடாது என்று எண்ணுவான். சுதந்திரமாகச் செயல்பட வேண்டுமென்பதே அவன் ஆசை. ஒருநாள், அவன் பட்டம் விட்டுக் கொண்டிருந்தான். அப்போது, அவனுடைய தந்தை அங்கு வந்தார். “இந்தப் பட்டத்தைப் பார்க்கும் போது உனக்கு என்ன தோன்றுகிறது“ எனக் கேட்டார். அதற்குக் குப்பன், “இந்த நூல் பட்டத்தின் சுதந்திரத்தைத் தடுத்துக்கொண்டிருக்கிறது“ என்றான். உடனே அவன் தந்தை , பட்டத் தின் நூலை அறுத்துவிட்டார் பட்டம் தடுமாறிக் கீழே விழுந்தது. இப்பொழுது பார், வரை யறைக் குட்பட்டு நூலுடன் இருக்கும் போது இந்தப் பட்டம் எவ்வளவு அழகாகப் பறந்து கொண்டிருந்தது? ஆனால் அந்த நூல்தான் பட்டத்தின் சுதந்திரத்தைத் தடுக்கிறது என்று நீ நினைத்தாய். இப்போது என்ன ஆயிற்று? நூல் அறுந்ததும் நிலை தடுமாறி, அந்தப் பட்டம் கீழே விழுந்துவிட்டதே இதுபோலத்தான் நம் வாழ்க்கையும் நூலறுந்த பட்டமாய் இருந்தால் நாமும் வாழ்வில் தடுமாறக்கூடும்“ என்று கூறினார்

**1. குப்பன் எந்த வகுப்பில் படிக்கிறான்?**

குப்பன் ஐந்தாம் வகுப்பு படிக்கிறான்

**2. பட்டத்தின் நூல் அறுந்ததும் அதன் நிலை என்னவாயிற்று?**

பட்டத்தின் நூல் அறுந்ததும் அதன் நிலை தடுமாறி, அந்தப் பட்டம் கீழே விழுந்து விட்டது.

**3.இக்கதையின் மூலம் நீங்கள் அறிந்து கொண்டது என்ன?**

நாம் பெற்றோரின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். அவ்வாறின்றி சுதந்திரமாய் வாழ விரும்பினால் வாழ்வில் தடுமாறுவோம்.

**ஊ. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கண்ணுக்கு அழகு பிறரிடம் **இரக்கம்** காட்டல்.
2. சிறுபஞ்சமூலம் **காரியாசான்** என்பவரால் எழுதப்பட்டது.

3. வாரிக் கொடுக்கும் வள்ளல் <u>வல்வில் ஓரி</u>
4. நாட்டு மக்களை வருத்தாமை <u>அரசனு</u> க்கு அழகு.

**எ. பிறமொழிச் சொற்கள் கலவாமல் எழுதுக.**

1. என்னுடைய புக் டேபிளில் உள்ளது. <u>புத்தகம் மேசையில்</u>
2. நான் டிவியில் நியூஸ் பார்த்தேன். <u>தொலைக்காட்சியில் செய்தி</u>
3. தை மாதம் பர்ஸ்ட் நாள் பொங்கல் பெஸ்டிவேல் கொண்டாடினான். <u>முதல் நாள் பொங்கல் பண்டிகை</u>
4. பாலன் ஸ்நாக்ஸ் சாப்பிட்டான். <u>நொறுக்குத் தீனி</u>

**ஏ. பாடலை நிறைவு செய்க**

ஓட்டு அதன் வறுமை ஓட்டு
கூட்டு அதன் வளம் கூட்டு
விரட்டு அதன் பகை விரட்டு
திரட்டு அதன் நிதி திரட்டு.

## தலைமைப் பண்பு

**அ. வினா விடை**

**1. வேம்பன் எதற்காகப் பலரை நாடிச் சென்று பொருளுதவி பெற்றார்?**

வேம்பன் செந்தூர் என்ற ஊருக்கு ஊர்த்தலைவராக இருந்தவர். அவ்வூரின் முன்னேற்றத்திற்காகப் பலரை நாடிச் சென்று பொருளுதவி பெற்றார்.

**2. ஊர்த்தலைவர் அறிவித்த இரண்டாவது போட்டி என்ன?**

செந்தூர் மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்த வேண்டும் என்பது இரண்டாவது போட்டியாகும்.

**3. செந்தூர் மக்களுக்குப் பாலன் மீது நம்பிக்கை ஏற்படக் காரணம் என்ன?**

பாலன் மக்களுக்கு அறுசுவை உணவளித்தார். தம் செல்வங்களை மக்களுக்குப் பிரித்துக் கொடுத்தார். இச்செயல்களால் செந்தூர் மக்களுக்கு பாலன் மீது நம்பிக்கை ஏற்பட்டது.

**4. சிறந்த நிருவாகி என ஊர்த்தலைவர் யாரை அறிவித்தார்?**

ஊர்த்தலைவர் பூவண்ணனைச் சிறந்த நிருவாகி என அறிவித்தார்.

**5. பூவண்ணன் மக்களின் முன்னேற்றத்திற்கு என்ன செய்ததாகக் கூறினார்?**

மக்களின் முன்னேற்றத்திற்குப் பூவண்ணன், திறமைசாலிகளைத் தேர்ந்தெடுத்துக் 9 கல்வியுடன் தனியாகத் தொழில் செய்து, பொருளாதாரத்தை மேம்படுத்தவும் பயிற்சிகள் - கொடுத்திருப்பதாகவும் மற்றக் கலைகளையும் கற்றுத்தர ஏற்பாடு செய்திருப்பதாகவும்" கூறினார்.

**ஆ. சிந்தனை வினாக்கள்.**

**1. உங்கள் ஊரை முன்னேற்றம் பெறச் செய்ய நீங்கள் எந்த வகையில் உதவுவீர்கள்?**

- ஊரை முன்னேற்றம் பெறச் செய்ய முதலில் செய்ய வேண்டியது கல்வி கற்காத மாணவர்கள் இவ்வூரில் இல்லை என்று கூறும் நிலையை ஏற்படுத்துவேன்.

- மழைக்காலங்களில் சாலையில் உள்ள மேடு பள்ளங்களைச் சரிசெய்வேன்.
- பொதுக்குழாய்களில் நீர் வரும் நேரத்தை அதிகப்படுத்துவேன். குழாய்கள் சரியாக மூடப்படாமல் இருந்தால் அவற்றை மாற்றிப் புதிய குழாய் அமைப்பேன்.
- மின் விளக்குகள் பகல் நேரங்களில் தெருக்களில் எரிந்தால் அதனை மின்வாரியத்திற்குத் தெரிவிப்பேன்.
- சிறியவர் முதல் முதியோர் வரை அனைவருக்கும் சத்து மிகுந்த இயற்கை உணவு கிடைக்க வழி வகை செய்வேன்.
- மழைநீர் தேங்கி அதனால் கொசுக்கள் பெருகுவதைத் தவிர்க்க மழைநீர் தேங்காமல் பார்த்துக் கொள்வேன்.
- நோய்கள் வராமல் இருக்க சுற்றுச்சூழலைப் பாதுகாப்பேன். மேற்கூறிய அனைத்தையும் செய்தால் ஊர் முன்னேற்றம் அடையும்.

**2. உங்களுக்குத் தலைமைப் பண்பு கிடைக்கிறது எனில், என்னவெல்லாம் செய்ய நினைப்பீர்கள்? பட்டியலிடுக.**:

எனக்குத் தலைமைப் பண்பு கிடைத்தால் நான் செய்ய நினைப்பவை :

- நாட்டின் முன்னேற்றத்திற்குக் கல்வி மிக மிக அவசியம் என்பதால் கல்வி நிலையங்களை உருவாக்கிப் புதிய கல்வி முறை மூலம் பல சான்றோர்களை உருவாக்குவேன்.
- வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி இளைஞர்களுக்கு உதவி புரிவேன்.
- கற்றலில் பின் தங்கிய மாணவர்களுக்கு உதவுவதற்கு படித்த இளைஞர்களை நியமித்து இலவசமாகக் கற்றுத் தருவதற்கு ஏற்பாடு செய்வேன்.
- போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவேன்.
- சாலை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி ஆகியவற்றை உண்டாக்கித் தருவேன்.
- ஏரி, குளங்களை அமைத்து நீர் நிலைகளைப் பலப்படுத்துவேன்.
- பொதுப்பணிகளைச் செய்வதற்கு அரசாங்கத்தை எதிர்பார்க்காமல் வீட்டிற்கு ஒருவரை வரவழைத்து செவ்வனே செய்வேன்.
- உழவுத்தொழிலில் புதிய உத்திகளை ஏற்படுத்துவேன்.

## இணைச்சொற்கள்

**அ. கீழ்க்காணும் தொடர்களில் பொருத்தமான இணைச்சொற்களைத் தேர்ந்தெடுத்து நிரப்புக**

1. பானைகள் **அடுக்கக்காக** வைக்கப்பட்டிருந்தன.
2. நேற்றுவரை **கீரியும்பாம்பும்** போல் இருந்தவர்கள் இன்று நட்புடன் பழகுகிறார்கள்.
3. தேர்வில் **கண்ணுங்கருத்துமாக** படித்ததால், நான் வகுப்பில் முதலாவதாக வந்தேன்.
4. வாழ்வில் **இன்பமும் துன்பமும்** உண்டு. அதனைக் கண்டு நாம் சோர்வடையக்கூடாது.
5. மன்ற விழாக்களில் எங்கள் ஆசிரியரின் பேச்சு ஈடும் **எடுப்புமாக** இருக்கும்.

**ஆ. விடுபட்ட இடங்களில் உரிய எதிரிணைச் சொற்களைக் கண்டறிந்து எழுதுக.**

1. இன்பமும் துன்பமும் - இன்பமும் துன்பமும்
2. அன்றும் இன்றும் - அன்றும் இன்றும்
3. அங்கும் இங்கும் - அங்கும் இங்கும்
4. உயர்வும் தாழ்வும் - உயர்வும்தாழ்வும்
5. விண்ணும் மண்ணும் - விண்ணும் மண்ணும்

## மொழியை ஆள்வோம்

**2. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. **பொருளுதவி** - செல்வந்தர்கள் வறியவர்களுக்குப் பொருளுதவி செய்து உதவ வேண்டும்.
2. **திறமைசாலி** - தெனாலிராமன் திறமைசாலியாக இருந்ததனால் கிருஷ்ண தேவராயரின் அவையில் விகடகவியாக இருந்தார்.
3. **நம்பிக்கை** - நாம் எச்செயலையும் நம்பிக்கையுடன் செய்து முடிக்க வேண்டும்.
4. **ஆராய்ச்சி** - எதனையும் ஏன்? எதற்கு? என்று ஆராய்ச்சி செய்து கூறுவது அறிவியல்.
5. **வான்புகழ்** - என் நண்பன், வெள்ளத்தில் அடித்துச் சென்ற சிறுவனைக் காப்பாற்றி ஒரே நாளில் வான்புகழ் பெற்றான்

**3. பொருத்தமான சொற்களைக் கொண்டு, தொடரை முழுமையாக்குக.**

1. கொடைத்திறத்தில் சிறந்தவர் வல்வில் ஓரி
2. மக்களுக்கு அறுசுவை விருந்தளித்தவர் பாலன்
3. திறமைசாலிகளைத் தேர்ந்தெடுத்தவர் பூவண்ணன்
4. இசைப் பாடல்களைப் பாடுபவர் பாணர்
5. மூதாட்டிபோல் வேடமிட்டவர் ஊர்த்தலைவர்

## மொழியோடு விளையாடு

**1. சரியான எழுத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வல்வில் ஓரி வாரித் தரும் **வள்ளல்** (ள், ல், ழ்)
2. பாணரே! உம் வறுமையைப் போக்குவது என் **பொறுப்பு** (று, ரு)
3. களிறும் கொடையாய் நல்கும் **வான்புகழ்** வல்வில் ஓரி (ன், ண்/ல், ள்,ழ்)
4. மக்களுக்குப் பாலன் மீது **அளவற்ற** நம்பிக்கை ஏற்பட்டது. (ர்/ற்)
5. பூவண்ணன் மூதாட்டிக்கு **உணவு** வாங்கிக் கொடுத்தான். (ண, ன, ந)

**2. சொல்லிலிருந்து புதிய சொல் உருவாக்கலாமா?**
**கொடுக்கப்பட்ட சொற்களையும், குறிப்புகளையும் கொண்டு புதிய சொல் உருவாக்குக.**

1. விடுகதை - மரத்திற்கு ஆதாரம் விதை
2. திருநெல்வேலி - பயிர்களைப் பாதுகாக்கும் வேலி
3. நகர்புறம் - விரலின் மணிமகுடம் நகம்
4. இமயமலை - உண்கலம் இலை

5. உருண்டை - நமது அடிப்படைத் தேவைகளுள் ஒன்று உடை

**3. சொற்களைக் கொண்டு புதிய தொடர்களை உருவாக்குக.**

1. **மதிவாணன் பலம் மிக்கவன்**
   காற்றடித்ததால் மரத்திலிருந்து பழம் விழுந்தது. (பழம்)
2. **இந்த மரம் உயரமாக உள்ளது.**
   வீரபாண்டிய கட்டபொம்மன் மறம் மிகுந்தவன். (மறம்
3. **நிலா தன் கையில் வளை அணிந்திருந்தாள்.**
   எலி, கொசுவலையைக் கடித்துவிட்டது. (வலை )
4. **சூரியனில் இருந்து ஒளி கிடைக்கிறது.**
   பேக்குவரத்துப் பெருக்கத்தினால் ஒலிமாசு ஏற்படுகிறது. (ஒலி)
5. **பரிமளா கடையில் வெல்லம் வாங்கினார்.**
   தொடர்மழையால் ஆற்றில் வெள்ளம் வந்தது. (வெள்ளம்)

**4. கீழ்க்காணும் குறுக்கெழுத்துப் புதிரில் உள்ள வினாக்களுக்குச் சிந்தித்துச் சரியான விடையைக் கண்டுபிடிக்க.**

**இடமிருந்து வலம்:**

1. அறிவியல் அறிஞர்கள் செய்வது ஆராய்ச்சி
2. இரக்கம் என்ற சொல்லை இப்படியும் கூறலாம் பரிவு

**வலமிருந்து இடம்:**

1. உலகின் மற்றொரு பெயர் தரணி
2. மக்களைக் காப்பவர் வேந்தன்
3. நவதானிய வகைகளுள் ஒன்று கம்பு

**மேலிருந்து கீழ்:**

1. அரசரின் ஆலோசகர் அமைச்சர்
2. கொல்லிமலை நாட்டின் அரசன் வல்வில் ஓரி

**கீழிருந்து மேல்:**

1. இது வந்திட பத்தும் பறக்கும் பசி
2. விரைந்து என்ற சொல்லின் எதிர்ச்சொல் மெதுவாக
3. இதைக் கேட்டால் மனம் மயங்கும் இசை

**5. வரிசைமாறியுள்ள தொடர்களை நிகழ்வுகளின் அடிப்படையில் வரிசைப்படுத்துக.**

1. ஊர்த்தலைவர் நிருவாகி ஒருவரை நியமிக்க எண்ணினார்.
2. பாலன், பூவண்ணன் இருவரும் நிருவாகி பதவிக்கு விருப்பம் தெரிவித்தனர்.
3. மூதாட்டி ஒருவர் மரத்தடியில் அமர்ந்திருந்தார்.
4. பூவண்ணனே நிருவாகியாகத் தகுதியானவர் என்றார் ஊர்த்தலைவர்.
5. ஊர்த்தலைவரின் முடிவை மக்கள் மகிழ்ந்து ஏற்றனர்.